| | |
|---|---|
| **අධ්‍යාපන අමාත්‍යාංශය**<br>**கல்வி அமைச்சு**<br>**Ministry of Education** | 'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.<br>'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.<br>'Isurupaya', Battaramulla, Sri Lanka.<br>+94112785141-50 +94112785818<br>info@moe.gov.lk www.moe.gov.lk |

මගේ යොමුව / எனது இல. / My Ref. } ED/ST/BUD/08/01/02/02/01 ඔබේ යොමුව / உமது இல. / Your Ref. } දිනය / திகதி / Date } 2024.05

அனைத்து மாகாண கல்விச் செயலாளர்கள்,
அனைத்து மாகாண கல்விப் பணிப்பாளர்கள்,
அனைத்து வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
அனைத்து கோட்டங்களுக்குப் பொறுப்பான பிரதி/உதவி கல்விப் பணிப்பாளர்கள்,
அனைத்து பிரிவெனாக்களின் பிக்கு அதிபர்கள்,
நிறுவன தலைவர்களுக்கும்,

**பிரிவெனாக்கள் மற்றும் சீலமாதா கல்வி நிறுவனங்களில் கல்வி பயிலும் மாணவ பிக்குமார்கள், சீலமாதாக்கள் மற்றும் இல்லற மாணவ மாணவிகளுக்கு சனாதிபதி நிதியத்தின் மூலம் வழங்கப்படும் புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டம்- 2024/2025**

நாட்டின் அனைத்து பிரிவெனாக்கள் மற்றும் சீலமாதா கல்வி நிறுவனங்களையும் உள்ளடக்கும் வகையில் கல்வி மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் திறமைகளை வெளிப்படுத்தும் மாணவ பிக்குமார்கள் சீலமாதாக்கள் மற்றும் இல்லற மாணவ மாணவிகளுக்காக சனாதிபதி நிதியத்தில் இருந்து புலமைப் பரிசில்களை வழங்கும் நிகழ்ச்சித்திட்டமொன்று மாண்புமிகு சனாதிபதி அவர்களின் எண்ணக்கருவிற்கமைய நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இந்த நிகழ்ச்சித்திட்டம் நாடுமுழுவதிலுமுள்ள 822 பிரிவெனாக்கள் மற்றும் சீலமாதா கல்வி நிறுவனங்களையும் ( 2022 புள்ளிவிபர மதிப்பீட்டு அறிக்கைக்கு அமைய – கல்வி அமைச்சு) உள்ளடக்கும் வகையில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதுடன் இதன்படி பிரிவெனா ஒன்றுக்கு/சீலமாதா கல்வி நிறுவனம் ஒன்றுக்கு வழங்கப்படும் ஆகக்கூடிய புலமைப்பரிசில்களின் எண்ணிக்கை 06 ஆகும். அதன்படி பிரிவெனாக்களின் பிக்கு அதிபர்கள் / நிறுவன அதிபர்களினால் தமது பிரிவெனாவுக்கு/ சீலமாதா கல்வி நிறுவனங்களுக்குரிய புலமைப்பரிசில் பெறுபவர்களை தேர்ந்தெடுக்க வேண்டும். இதற்கு தகைமை பெறும் புலமைப்பரிசில் பெறுபவர்களுக்கு பின்வருமாறு மாணவ உதவுதொகை வழங்கப்படும்.

i. பிரிவு இலக்கம் 01 – பிரிவெனாக்களில் (சாதாரண தரம் வரை) கல்வி கற்கும் மாணவ பிக்குமார்கள், சீலமாதாக்கள் மற்றும் க.பொ.த.(சாதாரண தரம்) வரை கல்விபயிலும் இல்லற மாணவ மாணவிகளுக்கு பரீட்சைக்குத் தோற்றும் மாதம் வரை மாதமொன்றுக்கு 3,000.00 ரூபா வீதம் 2024 ஆம் ஆண்டு மே மாதம் தொடக்கம் 12 மாதங்கள் வரை வழங்கப்படும்.

ii. பிரிவு இலக்கம் 02 – பிரிவெனாக்களில் (சாதாரண தரம்) / க.பொ.த. (சாதாரண தரம்) பரீட்சைக்குத் தோற்றி அந்த பரீட்சையில் சித்தியடைந்த பிராச்சீன பரீட்சைக்குத் தோற்றும் அல்லது க.பொ.த.(உயர் தரம்) பரீட்சைக்குத் தோற்றும் மாணவ பிக்குமார்கள், சீலமாதாக்கள் மற்றும் இல்லற மாணவ மாணவிகளுக்காக மாதம் ஒன்றிற்கு 6,000.00 ரூபா படி 2024 மே மாதம் தொடக்கம் பிராச்சீன (ஆரம்ப/மத்திய/இறுதி) பரீட்சைக்கு அல்லது க.பொ.த.(உயர் தரம்) பரீட்சைக்கு தோற்றும் மாதம் வரை அல்லது ஆகக்கூடியது 24 மாதங்களுக்கு வழங்கப்படும்.

**01. புலமைப்பரிசில்களுக்கு விண்ணப்பிப்பதற்கு தேவைப்படும் அடிப்படைத் தகைமைகள்**

1.1 பிரிவெனா ஒன்றில் அல்லது சீலமாதா கல்வி நிறுவனம் ஒன்றில் ஆரம்ப தரத்தில் இருந்து பிரிவெனாக்கள் (சாதாரண தரம்)/க.பொ.த.(சாதாரண தரம்)/பிராச்சீன பரீட்சைகள்/ க.பொ.த.(உயர் தரம்) பரீட்சைகளுக்கு தோற்றும் மாணவ பிக்குமார்கள், சீலமாதாக்கள் அல்லது இல்லற மாணவ மாணவியாக விளங்குதல் வேண்டும்.

1.2 இல்லற மாணவ மாணவிகளின் குடும்ப மாதாந்த வருமானம் 100,000.00 ரூபாவிற்கு மேற்படாதிருத்தல்.

**02 விண்ணப்பங்களைச் சமர்பித்தல்.**

2.1 இந்த புலமைப்பரிசில்களுக்காக விண்ணப்பிக்கவேண்டிய விண்ணப்பம் (இணைப்பு 01) மற்றும் அதற்கான ஆலோசனைகள் அடங்கிய பத்திரம் (இணைப்பு 02) பிரிவெனாக்களின் /சீலமாதா கல்வி நிறுவனங்களிலுள்ள அறிவித்தல் பலகையில் விளம்பரப்படுத்த பிரிவெனா அதிபர்கள் / நிறுவன அதிபர்களினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

2.2 அனைத்து பிரிவெனாக்கள்/ சீலமாதா கல்வி நிறுவனங்களின் பிரிவெனாக்களின் அதிபர்கள் /நிறுவனங்களின் அதிபர்கள் அவர்களினால் இந்தப் புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக தமது பிரிவெனா/ சீலமாதா கல்வி நிறுவனங்களின் கல்வி பயிலும் அனைத்து பிக்கு மாணவர்கள் /சீலமாதாக்கள்/மாணவர்கள் /மாணவிகளுக்கு அறிவுறுத்தல் வேண்டும்.

2.3 இவை தொடர்பான மேலதிக விபரம் மற்றும் விண்ணப்பப்படிவங்களை சனாதிபதி நிதியத்தின் www.presidentsfund.gov.lk மற்றும் கல்வி அமைச்சின் www.moe.gov.lk மற்றும் **www.piriven.gov.lk/piriven/** ஆகிய இணையத்தளங்களில் மற்றும் சனாதிபதி நிதியத்தின் உத்தியோகபூர்வ **Facebook** பக்கமான **www.facebook.com/president.fund** ஆகியவற்றில் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

2.4 மேற்குறிப்பிட்ட 1 ஆம் இலக்கத்திலுள்ள அடிப்படைத் தகைமைகளை பூர்த்தி செய்துள்ள மற்றும் புலமைப்பரிசில்களுக்கு விண்ணப்பிக்க விரும்பிய மாணவ பிக்குமார்கள் /சீலமாதாக்கள் மற்றும் இல்லற மாணவ மாணவிகள் உரிய விண்ணப்பத்தின் மாதிரிப்படிவத்திற்கமைய (இணைப்பு 01) விண்ணப்பத்தை தயாரித்துக்கொள்ள வேண்டும். அவ்வாறு தயார் செய்யப்பட்ட விண்ணப்பத்தை பூர்த்தி செய்து குறிப்பிட்ட சான்றிதழ்களுடன் தமது பிரிவெனாக்கள் அல்லது சீலமாதா கல்வி நிறுவனத்தின் பிரிவெனா அதிபர்கள் /நிறுவனங்களின் அதிபர்களுக்கு மாத்திரம் குறிப்பிட்ட திகதி அல்லது அதற்கு முன்னராக நேரடியாக ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

2.5 இல்லற மாணவ மாணவிகளின் குடும்ப மாத வருமானத்தை கிராம அலுவலரிடம் உறுதிப்படுத்தி பிரதேச செயலாளரின் பரிந்துரையுடன் சமர்ப்பித்தல் வேண்டும். (வருமான அறிக்கையினை பெறத்தேவையில்லை)

2.6 உரிய திகதிக்கு பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள், உரிய விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை உறுதிப்படுத்தும் ஆவணங்களின் பிரதிகளைக் கொண்டிராத மற்றும் குறைபாடுகளைக்கொண்ட விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**03. தெரிவு செய்யப்படும் முறை (அனைத்து தரங்களிற்கும்)**

**3.1 பிரிவெனாக்கள்/ சீலமாதா கல்வி நிறுவன மட்டம்**

3.1.1 இச் சுற்றறிக்கையில் 04 ஆம் இலக்கத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அளவுகோல் மற்றும் மதிப்பெண் நடைமுறைகளின் அடிப்படையில் பிரிவெனாக்கள் /சீலமாதா கல்வி நிறுவனங்களின் தெரிவுக்குழுவின் மூலம் கிடைக்கப்பெற்றுள்ள விண்ணப்பங்களின் மதிப்பெண்களை பரிசீலித்து உறுதிப்படுத்துதல் வேண்டும். பிரிவெனாக்கள் /சீலமாதாக்கள் கல்வி நிறுவன தெரிவுக்குழு, பிரிவெனா அதிபர் /நிறுவன அதிபர்களினால் அல்லது பிரிவெனா அதிபர்கள்/நிறுவன அதிபர்களினால் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதி பிரிவெனா அதிபர்கள்/நிறுவன அதிபர்களினால் அல்லது தலைமைத்துவத்துடன் கூடிய சிரேஷ்ட பிரிவெனா அதிபர்கள் இரண்டுபேரை உள்ளடக்கும் வகையில் தயார்செய்துகொள்ளல் வேண்டும்.

3.1.2 மாணவ பிக்குமார்கள்/சீலமாதாக்கள்/மாணவர்கள் /மாணவிகளினால் குறிப்பிட்ட திகதியில் அல்லது அதற்கு முன்னராக வழங்கப்படும் விண்ணப்பங்களை, பிரிவெனாக்கள்/சீலமாதா கல்வி நிறுவனங்களின் தெரிவுக்குழுவுக்கு அனுப்பி வைத்து குறிப்பிட்ட புள்ளிகளைப் பரிசீலித்து உறுதிப்படுத்துதல் வேண்டும். பின்னர் ஒவ்வொரு பிக்கு மாணவர்கள்/ சீலமாதாக்கள்/மாணவர்கள்/மாணவிகள் பெற்றுள்ள புள்ளிகளின்

அடிப்படையில் இந்தப் புலமைப்பரிசில்களை வழங்க வேண்டிய மிகவும் தகைமையுள்ள மாணவ பிக்குமார்கள்/ சீலமாதாக்கள் /மாணவர்கள்/மாணவிகள் தெரிவு செய்யப்பட்டு புலமைப்பரிசில்களுக்காக தகைமை பெற்றுள்ள ஒழுங்கு முறைக்கமைய இணைப்பு 03 இல் குறிப்பிட்டுள்ளவாறு தனது பிரிவெனாவுக்கு/ சீலமாதா கல்வி நிறுவனத்துக்கு குறிப்பிட்ட ஆகக்கூடிய புலமைப்பரிசில்களின் எண்ணிக்கைக்கமைய அதற்கான பெயர்ப்பட்டியலை சமர்பிக்கப்பட்டுள்ள விண்ணப்படிவத்துடன் முன்னுரிமை அடிப்படையில் தயாரித்து பிரிவெனாக்கள்/சீலமாதா கல்வி நிறுவனங்கள் என்பன உள்ளடங்கும் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் தேரர் (பிரிவெனா) அவர்களுக்கு குறிப்பிட்ட திகதி அல்லது அதற்கு முன்னர் அனுப்புதல் வேண்டும்.

3.1.3 புலமைப்பரிசில் பெறுபவர்கள் பிரிவெனாக்கள் / சீலமாதா கல்வி நிறுவன மட்டத்தில் தெரிவுசெய்யப்படும் போது பொருளாதார நெருக்கடி அல்லது வேறு ஏதேனும் ஒரு காரணத்தினால் எவரேனும் பிக்கு மாணவருக்கு / சீலமாதாவுக்கு / மாணவருக்கு/ மாணவிக்கு இந்த புலமைப்பரிசில்களை வழங்குவது மிகவும் பொருத்தமானது என பிரிவெனா/சீலமாதா கல்வி நிறுவனங்களின் தெரிவுக்குழு திருப்தியடையுமாயின், அவ்வாறான சந்தர்ப்பத்தில் இந்தப் புள்ளி மட்டங்களை கருத்திற்கொள்ளாமல் தெரிவுக்குழுவின் விருப்பத்தின்படி புலமைப்பரிசில் பெறுநரை தெரிவுசெய்து கொள்ள முடியும் என்பதுடன் இந்த தெரிவு தொடர்பாக கல்வி வலயத்துக்கு பொறுப்பான உதவிக் கல்விப் பணிப்பாளரின் (பிரிவெனா) சிபாரிசுகளை பெற்றுக்கொள்ள வேண்டும். எனினும் இவ்வாறு வழங்கப்படும் விசேட புலமைப்பரிசில்களின் எண்ணிக்கை பிரிவெனா ஒன்றுக்கு/ சீலமாதா கல்வி நிறுவனமொன்றுக்கு ஆகக்கூடியது ஒரு புலமைப்பிசிலாக வரையறுக்கப்படுதல் வேண்டும்.

3.1.4 பிரிவெனாக்கள்/ சீலமாதா கல்வி நிறுவன மட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு அந்த விண்ணப்பதாரி மற்றும் தாய்/ தந்தை/ பாதுகாவலர் ஆகியோர் இணைந்து பயன்படுத்தும் மாதாந்தம் புலமைப்பரிசிலைப் பெற்றுக்கொள்ளக் கூடியவகையில் விசேட இணைந்த கணக்கு திறக்கப்பட்டு அந்த சேமிப்புக் கணக்கின் விபரம் உள்ளடங்கிய பக்கத்தின் (விபர பக்கம்) நிழற்படப்பிரதி மற்றும் பிரிவெனா தலைவர் /நிறுவன அதிபரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட தாய்/ தந்தை / பாதுகாவலரின் தேசிய அடையாள அட்டையின் நிழற்படப் பிரதியொன்று வலயக் கல்விப் பணிப்பாளருக்கு (பிரிவெனா) சமர்ப்பித்தல் வேண்டும்.

3.1.5 சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏனைய அனைத்து விண்ணப்பங்களும் பிரிவெனா/ சீலமாதா கல்வி நிறுவனத்தில் பாதுகாப்பாக வைத்திருப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

## 3.2 வலய மட்டம்

3.2.1

இந்த புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளுக்கு பொருத்தமான உத்தியோகத்தர் ஒருவரை நியமிப்பதற்கு உதவி வலயக் கல்வி பணிப்பாளர் (பிரிவெனா) அவர்களால் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

3.2.2 i. புலமைப்பரிசில் வழங்குவதற்கு பரிந்துரைக்கப்பட்ட மாணவ பிக்குமார்கள்/ சீலமாதாக்கள் /மாணவ/மாணவிகளின் விபரங்கள், பெற்றுக்கொண்ட புள்ளிகள் ஒழுங்கின்படி இணைப்பு 04 ல் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கமைய வலயத்தில் உள்ள அனைத்து பிரிவெனாக்கள்/சீலமாதா கல்வி நிறுவனங்களுக்காக புலமைப்பரிசில் பெயர்ப்பட்டியலொன்றை தயாரித்தல் வேண்டும்.

ii.இதற்கு இணையாக தெரிவு செய்யப்பட்ட புலமைப்பரிசில்களை பெறுவோரின் வங்கிக் கணக்குகள் தொடர்பான தகவல் அடங்கிய ஆவணத்தையும் ( இணைப்பு 05 இல் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிக்கமைய) தயார் செய்தல் வேண்டும். விண்ணப்பதாரர் மற்றும் தாய்/தந்தை/பாதுகாவலர் இணைந்து காணப்படும், மாதாந்தம் புலமைப்பரிசில் தொகையினைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையிலான (விசேட இணைந்த கணக்கு) சேமிப்பு கணக்கொன்றை திறந்து அக்கணக்கின் விபரங்களடங்கிய பக்கத்தின் (விபரப் பக்கம்) தெளிவான பிரதி மற்றும் பிரினொக்களின் அதிபர்/நிறுவன அதிபரினால் உறுதிப்படுத்திய தாய்/தந்தை/பாதுகாவலரின் தேசிய அடையாள அட்டையின் பிரதியினைப் பெற்று இணைப்பு 05 இல் குறிப்பிடப்பட்ட மாதிரிப்படிவத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

**கவனிக்க :-**

- குறிப்பிட்ட அனைத்து மாதிரிப்படிவங்களும் புலமைப் பரிசில் பெறுவோரின் பெயர்ப்பட்டியலின் ஒழுங்குகள் மாற்றமெதுவுமின்றி குறிப்பதற்கு நடவடிக்கையெடுத்தல் வேண்டும் என்பதுடன், தேசிய அடையாள அட்டை/ வங்கிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள பெயர்கள் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்ட பெயர்களுக்கு சமனாயிருத்தல் வேண்டும்.

- புலமைப்பரிசில் பெறுபவரை, துறவறம் பூணச்செய்த ஆசிரியர்/ ஆசிரிய சில்மாதாக்கள் தாய்/தந்தை இல்லாமல் பாதுகாவலர் பொறுப்பில் இருப்பின் அதனை உறுதிப்படுத்துவதற்கான பத்திரமொன்றைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

3.2.5 தெரிவு செய்யப்பட்ட புலமைப்பரிசிற்குரியவர்களின் பெயர்ப்பட்டியல் வலயக் கல்விப் பணிப்பாளரால் (பிரிவெனா) உறுதிப்படுத்தி மென் மற்றும் வன் பிரதிகளை மாகாண கல்விப் பணிப்பாளருக்கு (பிரிவெனா) பிரதியுடன் கல்வி அமைச்சின் பணிப்பாளர் (பிரிவெனா) அவர்களுக்கு அனுப்புதல் வேண்டும். (இதனுடன் தெரிவுசெய்யப்பட்ட புலமைப்பரிசில் பெறுநர் மற்றும் தாய்/தந்தை/பாதுகாவலர் இணைந்து பயன்படுத்தும் மாதாந்தம் புலமைப்பரிசிலைப் பெற்றுக்கொள்ளும் வகையில் (விசேட இணைந்த கணக்கு) நடைமுறையில் உள்ள வங்கிக் கணக்கொன்றின் விபரங்கள் அடங்கிய (விபர பக்கம்) நிழற்படப் பிரதி மற்றும் தந்தை /தாய் / பாதுகாவலர் ஆகியோரின் தேசிய அட்டையின் நிழற்படப் பிரதியொன்றும் பிரிவெனா அதிபரினால்/ நிறுவன அதிபரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.)

3.2.6 சுற்றறிக்கையின் 3.2.1 இல் குறிப்பிடப்பட்ட வலய ஒருங்கிணைப்பு உத்தியோகத்தரினால் பிரிவென்/சீலமாதா கல்வி நிறுவனங்களினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பங்களையும் பெயர்ப் பட்டியலையும் கோவைப்படுத்திவைத்தல் வேண்டும்.

### 3.3 மாகாண மட்டம்

3.3.1 இந்த புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டத்தை ஒருங்கிணைப்பதற்காக தகுந்த உத்தியோகத்தர் ஒருவரை நியமிக்க பிரதிக் கல்விப் பணிப்பாளரினால் (பிரிவெனா) நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

### 3.4 தேசிய மட்டம்

3.4.1 மாகாண கல்விப் பணிப்பாளரால் பரிந்துரைக்கப்பட்டு பணிப்பாளர் (பிரிவெனா) அவர்களினால் கல்வி அமைச்சின் செயலாளரிடம் அனுப்பப்படுகின்ற தெரிவுசெய்யப்பட்ட மாணவர் பெயர்ப் பட்டியல் இணைப்பு 04 இல் குறிப்பிட்ட படிவம் மற்றும் வங்கிக் கணக்கு விபரங்கள் உள்ளடங்கிய பட்டியல் இணைப்பு 05 இல் குறிப்பிடப்பட்ட மாதிரிக்கமைய குறிப்பிட்ட கால எல்லைக்குள் கல்வி அமைச்சின் செயலாளரின் பரிந்துரையுடன் செயலாளர், சனாதிபதி நிதியத்திற்கு அனுப்புதல் வேண்டும்.

3.4.2 அவ்வாறு அனுப்பப்படுகின்ற முன்மொழியப்பட்ட புலமைப்பரிசில் பெறுபவர்களுக்கு மாத்திரம் இந்த புலமைப்பரிசில்கள் வழங்கப்படும்.

## 04. அளவுகோல் மற்றும் மதிப்பெண் நடைமுறை

விண்ணப்பதாரியொருவருக்கு வழங்கக்கூடிய அதிகூடிய மதிப்பெண்களின் எண்ணிக்கை 100 ஆகும்.

4.1 மாணவ பிக்கு /சீலமாதாக்களின் மற்றும் இல்லற மாணவ மாணவிகளின் செயலாற்றுகை

**4.1.1.** பிரிவு இலக்கம் 01 – பிரிவெனா (சாதாரண தரம்) / க.பொ.த.(சா.த.) வரை கல்வி கற்கும் மாணவ பிக்குமார்கள் சீலமாதாக்கள் மற்றும் க.பொ..த. (சாதாரண தரம்) வரை கல்வி கற்கும் இல்லற மாணவ மாணவிகள் 2023 ஆம் ஆண்டு நடைபெற்ற இறுதி தவணைப் பரீட்சையில் வகுப்பில் அவர் பெற்றுக்கொண்ட நிலை .

| | |
|---|---|
| 01 ஆம் நிலை தொடக்கம் 03 ஆம் நிலை வரை | **70** புள்ளி |
| 04 ஆம் நிலை தொடக்கம் 06 ஆம் நிலை வரை | 65 புள்ளி |
| 07 ஆம் நிலை தொடக்கம் 10 ஆம் நிலை வரை | 60 புள்ளி |
| 11 ஆம் நிலை தொடக்கம் 15 ஆம் நிலை வரை | 55 புள்ளி |
| 16 ஆம் நிலை தொடக்கம் 20 ஆம் நிலை வரை | **50** புள்ளி |

(ஆகக் கூடிய புள்ளிகள் 70)

**4.1.2** பிரிவு இலக்கம் 02 மற்றும் 03 – பிரிவெனா (சாதாரண தரம்) / க.பொ.த.(சாதாரண தரம்) பரீட்சைக்குத் தோற்றி அதில் சித்தியடைந்து பிராச்சீன பரீட்சைக்குத் தோற்றும் அல்லது க.பொ.த. (உயர் தரம்) பரீட்சைக்குத் தோற்றும் மாணவ பிக்குமார்கள், சீலமாதாக்கள் மற்றும் இல்லற மாணவ மாணவிகளால் பிரிவெனாக்களின் சாதாரண தரம்/ க.பொ.த (சாதாரண தரம்) பரீட்சையில் பெற்ற பெறுபேறுகள்.

| | |
|---|---|
| விசேட சித்தி **(A)** | 08 புள்ளி |
| அதி திறமைச் சித்தி **(B)** | 06 புள்ளி |
| திறமைச் சித்தி **(C)** | 04 புள்ளி |
| சாதாரண சித்தி **(S)** | 02 புள்ளி |

(ஆகக் கூடிய புள்ளிகள் 70)

**4.2** இணைப்பாடவிதான செயற்பாடுகள் (விளையாட்டு/அழகியல் மற்றும் வேறு) (விண்ணப்பபடிவத்தில் இலக்கம் 03)

பிரிவெனாக்கள் /சீலமாதா கல்வி நிறுவன மட்டத்தில் செயற்படுத்தப்படும் பாரம்பரிய பிரிவென மொழி மற்றும் இலக்கியப் போட்டிகள் /மெய்வல்லுநர் போட்டிகள் /செஸ்/ நீச்சல்/ ஜிம்னாஸ்டிக்/ கராட்டி/ சுற்றாடல் படையணி/ இசைக்கருவி இசைத்தல்/ பாடல்/ ஓவியம்/ நடனம்/ சாரணர்/ சிறிய நண்பி மற்றும் வேறு அனுமதிக்கப்பட்ட இணைப்பாட விதான செயற்பாடுகள். (இல்லற/துறவற பிரிவினருக்கு ஏற்றவகையில்)

| | பிரிவெனாக்கள் /சீலமாதா கல்வி நிறுவன மட்டம் | வலய மட்டம் | மாவட்ட மட்டம்/மாகாண மட்டம் | தேசிய மட்டம் |
|---|---|---|---|---|
| முதலாமிடம் | 07 | 08 | 09 | 10 |
| இரண்டாமிடம் | 05 | 06 | 07 | 08 |
| மூன்றாமிடம் | 03 | 04 | 05 | 06 |

(ஆகக் கூடிய புள்ளிகள் 10)

கவனிக்க :-

- ஒரு வருடத்திற்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படல் வேண்டுமென்ற அடிப்படையில், அண்மித்த 03 வருடங்களை கவனத்திற் கொள்ளப்படல் வேண்டும்.
- மாணவரொருவருக்கு ஒரே இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்கு தேசிய, மாகாண, வலய மற்றும் பிரிவெனாக்கள்/ சீலமாதா கல்வி நிறுவனம் /பாடசாலை ஆகிய மூன்று மட்டங்களில் தொடர்ந்து 03 வருடங்களிலும் வெற்றி பெற்றிருந்தால் புள்ளிகள் வழங்கும் போது ஆகக்கூடிய புள்ளி மட்டத்தினையே கவனத்திற் கொள்ள வேண்டும்.

**4.3 <u>மாணவர் தலைமைத்துவம் (விண்ணப்பப்படிவத்தில் 03 ஆம் இலக்கம்)- அனைத்து தரங்களிற்கும் (தற்போது வகிக்கும் அல்லது வகித்த)</u>**

| | |
|---|---|
| பிரிவெனாக்கள்/ சீலமாதா கல்வி நிறுவனங்களில் தலைமை மாணவத் தலைவர் / உப மாணவ தலைவர் | 15 புள்ளிகள் |
| மாணவர் தலைவர் ( சிரேஷ்ட/கனிஷ்ட) | 12 புள்ளிகள் |
| வகுப்புத் தலைவர் | 10 புள்ளிகள் |

(ஆகக் கூடிய புள்ளிகள் 15)

கவனிக்க :- மேற்குறிப்பிட்ட 4.3 இல் புள்ளிகள் வழங்கும் போது ஆகக்கூடிய மட்டத்தினை மாத்திரமே கவனத்திற்கொள்ளல் வேண்டும்.

**4.4** <u>விண்ணப்பதாரர் அறநெறி பாடசாலைக் கல்வி கற்றலினை மேற்கொள்ளல் (விண்ணப்பத்தின் 04 ஆம் இலக்கம்) - அனைத்து தரங்களிற்கும்</u>

<u>அறநெறிநெறி பாடசாலையின் தலைமை ஆசிரியரால் வழங்கப்பட்ட அத்தாட்சிப்படுத்தப்பட்ட கடிதம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்)</u>

| | |
|---|---|
| அறநெறி பாடசாலைக் கல்வி கற்றல்<br>(ஒரு வருடத்திற்கும் மேலாக அறநெறிக் கல்வியினை பெறுதல் மற்றும் தற்போதும் அறநெறி பாடசாலையின் மாணவ/மாணவியாக இருத்தல்.) | 05 புள்ளி |

(ஆகக் கூடிய புள்ளிகள் 05)

- அனைத்து பதிவு செய்யப்பட்ட அறநெறிப் பாடசாலைகளும் இதற்குட்படும்.

**05 புலமைப்பரிசில் வழங்குதல்**

5.1 இந்த புலமைப் பரிசில்கள் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2024 மே மாதத்திலிருந்து புலமைப்பரிசில் பெறுபவர்களுக்கு பின்வருமாறு மாணவ உதவு தொகை வழங்கப்படும்.

**i.** பிரிவு இலக்கம் 01- பிரிவெனாக்கள் ( சாதாரண தரம்) வரை கல்வி கற்கும் மாணவ பிக்குமார்கள், சீலமாதாக்கள் மற்றும் க..பொ.த.(சாதாரண தரம்) வரை கல்வி கற்கும் இல்லற மாணவ மாணவிகளுக்காக மாதத்திற்கு 3,000.00 ரூபா வீதம் 2024 ஆம் ஆண்டு மே மாதம் தொடக்கம் 12 மாதங்களிற்கு.

**ii.** பிரிவு இலக்கம் 01- பிரிவெனாக்கள் ( சாதாரண தரம்) க.பொ.த.(சாதாரண தரம்) பரீட்சைக்கு தோற்றி அப்பரீட்சையில் சித்தியடைந்து பிராச்சீன பரீட்சைக்கு தோற்றுகின்ற அல்லது க.பொ.த.(உயர் தரம்) பரீட்சைக்கு தோற்றுகின்ற மாணவ பிக்குமார்கள், சீலமாதாக்கள் மற்றும் இல்லற மாணவ மாணவிகளுக்காக மாதமொன்றுக்கு ரூ.6,000.00 வீதம் 2024 மே மாதம் தொடக்கம் பிராச்சீன (ஆரம்ப/ மத்திய/ இறுதி) பரீட்சை அல்லது க.பொ.த. (உயர் தரம்) பரீட்சைக்கு தோற்றுகின்ற மாதம் வரை அல்லது உயர்ந்தபட்சம் 24 மாத காலங்களுக்காக புலமைப்பரிசில் பெறுபவர்களை தெரிவுசெய்ததன் பின்னர் உரிய தொகை வழங்கப்பட்டுள்ள புலமைப்பரிசில் பெறுநர்கள் மற்றும் தாய்/தந்தை/பாதுகாவலர் ஆகியோரின் இணைந்த கணக்கில் மாதாந்தம் புலமைப்பரிசில் பணத்தினைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் (விசேட இணைந்த கணக்கிற்கு) மாத்திரம் தொடர்ந்து நேரடியாக பணம் வைப்புச்செய்யப்படும்.

5.2 எவரேனும் புலமைப்பரிசில் பெறுநருக்கு எந்தவொரு காரணத்தினாலும் தற்போது கல்விபயிலும் பிரிவெனாக்கள்/ சீலமாதா கல்வி நிறுவனங்களில் கல்வி பயின்று அதிலிருந்து முறையாக விடுவிக்கப்பட்டு வேறு பிரிவெனாக்கள்/ சீலமாதா கல்வி

நிறுவனங்களில் இணைந்துள்ளார்களாயின், அதனை உறுதிப்படுத்தும் கடிதமொன்று புதிய பிரிவெனாக்கள்/ சீலமாதா கல்வி நிறுவனத்தின் பிரிவெனாக்களின் அதிபர்கள்/ நிறுவன அதிபர்கள் ஊடாக (இணைப்பு 06 மாதிரிப்படிவத்திற்கமைய) சனாதிபதி நிதியத்திற்கு அனுப்புதல் வேண்டும்.

## 06 புலமைப்பரிசில்களை ஒழுங்குபடுத்துதல்

6.1 புலமைப்பரிசில்களை ஒழுங்குபடுத்துதல் வலய மட்டத்தில் மேற்கொள்வதற்கு மாணவ பிக்குமார்கள் /சீலமாதாக்கள் கல்வி கற்கும் பிரிவெனாக்கள்/ சீலமாதா கல்வி நிறுவனங்கள் ஆகியன உரித்துடைய உதவி வலயக் கல்விப் பணிப்பாளர் (பிரிவெனாக்கள்) அவர்களால் மேற்கொள்ளப்படவேண்டும். அதற்காக நியமிக்கப்பட்ட ஒருங்கிணைப்பு உத்தியோகத்தருக்கு குறிப்பிட்ட பொறுப்பினை வழங்குதல் வேண்டும்.

6.2 மாகாண மட்டத்தில் புலமைப்பரிசில் பெறுபவர்களை ஒருங்கிணைத்தல் குறிப்பிட்ட மாகாணத்துக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளரினால் (பிரிவெனாக்கள்) மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதுடன், அது தொடர்பான பொறுப்பினை குறிப்பிட்ட ஒருங்கிணைப்பு உத்தியோகத்தருக்கு வழங்குதல் வேண்டும்.

6.3 தேசிய மட்டத்தில் புலமைப்பரிசில் பெறுபவர்களுக்குரிய ஒழுங்குகள் கல்வி அமைச்சின் பிரிவெனாக்களின் கல்விப் பிரிவு மற்றும் சனாதிபதி நிதியத்தினால் மேற்கொள்ளப்படும்.

## 07 புலமைப்பரிசில்களை இரத்துச் செய்தல்

பின்வரும் காரணங்களுக்காக இந்த புலமைப்பரிசில் பெறுபவர்களுக்கு வழங்கப்படும் புலமைப்பரிசில்களை இரத்துச் செய்வதற்கு சனாதிபதி நிதியத்திற்கு அதிகாரம் உள்ளது.

I. ஒழுக்கமற்ற நடத்தைக்கு புலமைப்பரிசிலைப் பெறுபவர் தண்டனை பெறுதல்.

II. ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்கள் எவற்றையும் அறிவிக்காது தொடர்ச்சியாக 21 நாட்கள் பிரிவெனாக்கள்/ சீலமாதா கல்வி நிறுவனங்களுக்கு சமூகமளிக்காதிருத்தல்.

III. பிரிவெனாக்கள்/ சீலமாதா கல்வி நிறுவனங்களில் கல்வி நடவடிக்கைகளிலிருந்து விலகுதல்.( பிரிவெனாக்கள்/ சீலமாதா கல்வி நிறுவனங்களில் விலகல் சான்றிதழ் வழங்குதல்.)

IV. கட்டணம் செலுத்தப்படும் சர்வதேச பாடசாலையொன்றுக்கு அனுமதி பெறுதல்.

**கவனிக்க** – மேற்குறிப்பிட்ட நிபந்தனைகள் மீறப்படும் சந்தர்ப்பத்தில் புலமைப்பரிசில்களை இரத்துச்செய்வதற்காக பிரிவெனாவின் அதிபர்/நிறுவனத்தின் அதிபரினால் வலயத்திற்குப் பொறுப்பான உதவிப் பணிப்பாளர் மூலம் சனாதிபதி நிதியத்திற்கு அறிவித்தல் வேண்டும்.

## 08 புலமைப்பரிசில் தொடர்பான தகவல்களை அறிந்துகொள்ளுதல்.

இந்த அறிவுறுத்தல் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் விடயங்கள் தொடர்பிலான தெளிவினைப் பெற விரும்பினால், பின்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு **(Email)** செய்தியொன்றை அனுப்புதல் அல்லது தொலைபேசி இலக்கத்திற்கு அழைப்பினை ஏற்படுத்தி தேவையான தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

மின்னஞ்சல் **(Email) :- pfschol@presidentsoffice.lk**

தொலைபேசி இலக்கம்**:- 011- 2 354 354 (உள் இணைப்பு - 4830/ 4835/ 4837)**

**WhatsApp** இலக்கம் **:- 074 -085 4527 (குறுஞ்செய்திகள் மாத்திரம்)**

- விண்ணப்பத்தினை பூர்த்தி செய்தல் தொடர்பாக ஏதேனும் பிரச்சனைகள் ஏற்பட்டால் கல்வி அமைச்சின் பிரிவெனாக்கள் பிரிவில் தகவல்களைப் பெற்றுக்கொள்ளமுடியும்.
  தொலைபேசி இலக்கம :- 011- 2 784461

**09 கால வரையறை**

| | **செயற்பாடுகள்** | **காலம் (**குறித்த பணிகளுக்குரிய இறுதி திகதி) |
|---|---|---|
| 9.1 | விண்ணப்பம் கோருதல் | 2024.05.06 |
| 9.2 | பூர்த்திசெய்த விண்ணப்பங்களை பிரிவெனாக்களின் அதிபருக்கு/ நிறுவன அதிபருக்கு கையளித்தல். | 2024.05.22 |
| 9.3 | பிரிவெனாக்கள்/ சீலமாதா கல்வி நிறுவனங்கள் மட்டத்தில் தகுதியுடையவர்களைத் தெரிவுசெய்யும் பணிகளை மேற்கொண்டு பிரிவெனாக்களின் அதிபரினால்/ நிறுவன அதிபரினால் பாடசாலை மட்டத்தில் தெரிவுசெய்த மாணவர் பெயர்ப் பட்டியலினை வலய கல்வி அலுவலகத்திற்கு அனுப்புதல். | 2024.05.27 |
| 9.4 | வலய மட்டத்தில் தகுதியுடையவர்களின் பட்டியலைத் தயாரித்து மாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளருக்கு (பிரிவெனா) பிரதியுடன் கல்வி அமைச்சின் பிரிவெனாக் கல்விப் பிரிவுக்கு அனுப்புதல். | 2024.05.29 |
| 9.4 | கல்வி அமைச்சின் மூலம் அந்த ஆவணத்தை சனாதிபதி நிதியத்திற்கு அனுப்புதல். | 2024.05.30 |

தற்போது நடைமுறைப்படுத்தப்படும் வேறு ஏதேனும் புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மாணவர் உதவிதொகை அல்லது புலமைப்பரிசில்களைப் பெற்றாலும் இதற்குரிய அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்திருந்தால் இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கும் விண்ணப்பிக்க முடியும்.

இச்சுற்றறிக்கை தொடர்பாக ஏதேனும் பிரச்சனைகள் ஏற்பட்டால் அவை தொடர்பாக கல்வி அமைச்சு செயலாளரினால் சனாதிபதியின் செயலாளரிடம் விசாரித்து இறுதி தீர்மானம் எடுக்கப்படும்.

...........................
செயலாளர்
கல்வி அமைச்சு.

பிரதிகள் :-

01. சனாதிபதியின் செயலாளர், சனாதிபதி அலுவலகம் - தயவுடன் தகவலுக்காக
02. செயலாளர், பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு - தயவுடன் தகவலுக்காக
03. செயலாளர், சனாதிபதி நிதியம் - தயவுடன் தகவலுக்காக